# சம்பங்கி, கோழிக்கொண்டை. செம்மறி.. சிக்கன விவசாயம்.. சிறப்பான வருமானம் !

## 10.12.2013



எந்த ஒரு விஷயத்தையும், தெளிவாகத் திட்டமிட்டு செய்தால்.. வெற்றி மேல வெற்றிதான்' என்பதற்கு உதாரணமாக.. சந்தோஷ மணம் வீசும் சம்பங்கி, 'பளபள' வண்ணம் காட்டும் பட்டுப்பூ (கோழிக்கொண்டை) என மலர் சாகுபடியில் சிறப்பான வருமானத்தை ஈட்டிக் கொண்டிருக்கிறார்கள்.. மூர்த்தி – ஜெயசித்ரா தம்பதி!

திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர் அடுத்துள்ள அம்மாபாளையம் கிராமத்தில், முழுக்க கிணற்றுப் பாசனத்தை மட்டுமே நம்பி, இதை சாதித்துக் கொண்டிருக்கும் இந்தத் தம்பதியிடம் பேசப் பேச.. ' சின்னச்சின்ன நுணுக்கங்களைக்கூட எத்தனை அழகாக உள்வாங்கிக் கொண்டு, அதையெல்லாம் சிறப்பாகப் பயன்படுத்தி, சாதித்துக் கொண்டிருக்கிறார்கள்' என்கிற பெருமை மேலிடுகிறது. பூமியிலிருந்து பெய்யும் மழையாக, சம்பங்கி வயலில் சுழன்று சுழன்று பாசன நீரைத் தூவிக் கொண்டிருக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட பட்டாம்பூச்சி (தெளிப்பு நீர்) பாசனக் கருவிகள் மற்றும் கோழிக் கொண்டைப்பூ வயலில் ஆங்காங்கே நெளியாத பாம்புகளாகக் கிடக்கும் சொட்டு நீர்ப் பாசனக் குழாய்கள்.. இதையெல்லாம் கைநீட்டும் தம்பதி, இதுங்க மட்டும் இல்லாமல் போயிருந்தால்… நாங்களும் எப்பவோ விவசாயத்தை விட்டு வெளியேறியிருப்போம். இதுதாங்க சத்தியமான உண்மை என்கிறார்கள் நெகிழ்ச்சியுடன்.

எங்களுக்கு இந்த இடத்தில் 8 ஏக்கர் நிலம் இருக்கிறது. இது மிகவும் வறட்சியான பகுதி. மழை வந்தால்.. சோளம், நிலக்கடலை என்று விதைப்போம். சில வருடமாக சரியான மழை இல்லாததால்… பாட்டன், பூட்டன் வெட்டின கிணறும் வத்திப் போச்சு. நிலத்தடி நீர்மட்டமும் பாதாளத்திற்குப் போய்விட்டது. சரி என்று, 900 அடி ஆழத்திற்கு போர்வெல் போட்டோம். அதிலும் குறைவான தண்ணீர்தான். மாடு, கன்று… கொஞ்சம் தென்னை மரம் இதுக்கு மட்டும்தான் போதுமானதாக இருந்தது. இந்த நலையில், 'தினமும் ஒரு மணி நேரம் மட்டுமே கிடைக்கும் போர்வெல் தண்ணீரை வைத்து, சொட்டு நீர், பட்டாம்பூச்சிப் பாசன முறைகள் மூலமாக பணப்பயிர்கூட சாகுபடி செய்யலாம் என்று பசுமை விகடனில் படித்து தெரிந்து கொண்டோம். அதன்படிதான் சம்பங்கி ஒரு ஏக்கர், கோழிக்கொண்டை ஒரு ஏக்கர் என்று சாகுபடி செய்து கொண்டிருக்கிறோம்.

குறைவான அளவே கிடைக்கும் போர்வெல் தண்ணீரை சேமித்து வைக்கும் மாதிரி சிமெண்ட் தொட்டி கட்டினோம். சம்பங்கி வயலுக்கு பட்டாம்பூச்சி பாசனக் கருவிகளையும், கோழிக் கொண்டைப் பூவுக்கு சொட்டுநீர்க் குழாய்களையும் அமைத்தோம். பட்டாம்பூச்சி பாசனக் கருவிகளை, கம்பெனி மூலமாக அமைத்தால்.. 30% கூடுதல் செலவாகும். அதனால், பசுமை விகடனில் பேட்டி கொடுத்திருந்த அனுபவ விவசாயிகளைத் தொடர்பு கொண்டு, அவங்க ஆலோசனைப்படி நானும் என் மனைவியும்

கடைகளிலிருந்து, நேரடியாக வாங்கி பொருத்திட்டோம். ஏக்கருக்கு 180 தெளிப்புக் கருவிகள் தேவைப்படும். 5 அடி உயரமுள்ள குச்சிகளை நட்டு, ‘நாசில்’களை அதில் பொருத்திட்டோம். பம்ப்செட்டை போட்டுவிட்டால்.. ‘180’ பட்டாம்பூச்சிக் கருவிகளும் ‘சர்சர்’ என்று சாரல் மழையாக செடிகள் மீது தெளிக்கிறது.

கோழிக்கொண்டைச் செடிகளுக்கும் வேர்ப்பகுதியில் பாசனம் கொடுக்கும் சொட்டுநீர்க் கருவிகளை நாங்களே பொருத்திட்டோம். கோழிக்கொண்டைப் பூ, வெல்வெட் மாதிரி ரொம்ப மென்மையான இதழ்களைக் கொண்டது. அதற்கு பட்டாம்பூச்சி பாசனம் சரிப்பட்டு வராது. அதனால்தான், அதற்கு மட்டும் சொட்டு நீர் என்றார் மூர்த்தி.

பூ விவசாயத்தை இயற்கை முறையில் செய்யும் கொஞ்சம் சிரமமான காரியம் என்று பரவலாக சொல்வாங்க. நாங்க பெருமுயற்சி எடுத்து, அதை செய்து கொண்டு இருக்கிறோம். எல்லாம் பசுமை விகடன் சொல்லித் தந்த தைரிய பாடம்தான் என்றார் தெம்பாக.

‘சம்பங்கி, கிழங்கு வகை மலர்ச்செடி. சித்திரை, வைகாசிப் பட்டத்தில் நடவு செய்வது மிகவும் உகந்தது. ஏக்கருக்கு 200 முதல் 300 கிலோ விதைக் கிழங்குகள் தேவைப்படும். திருவண்ணாமலையிலிருந்து வரவழைத்து, நடவு செய்தேன். போக்குவரத்துச் செலவோடு சேர்த்து, 25,000 ரூபாய் ஆனது. நடவுக்கு முன், நிலத்தின் மண் பொலபொலப்பாக மாறும்படி, இரண்டு முறை கோடை உழவு செய்ய வேண்டும். தொடர்ந்து, 10 டிராக்டர் தொழுவுரத்தை அடியுரமாகக் கொட்டி, பரவலாக இறைத்து சமப்படுத்திக் கொள்ள வேண்டும். பிறகு, மண்வெட்டி கொண்டு, 3 அடி இடைவெளி பார் அமைத்து, வரப்பு நனையும்படி பாசன நீரைப் பாய்ச்சி , வடித்து சுண்டியபின் இரண்டுக்கு இரண்டு அடி இடைவெளியில் கிழங்குகளை நடவு செய்ய வேண்டும்.

விதைக் கிழங்கு தேர்வு என்பது மிகமுக்கியம். குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் பலன்கொடுத்த செடிகளின் கிழங்குகளைத் தான் தோண்டி எடுத்து பயன்படுத்த வேண்டும். முன்னதாக விதைக் கிழங்குகளை பஞ்சகவ்யா கரைசலில் நனைத்து, விதைநேர்த்தி செய்வது அவசியம். 100 லிட்டர் தண்ணீரில், 5 லிட்டர் பஞ்சகவ்யா கரைசலைக் கலந்து, அதில் விதைக் கிழங்குகளை 5 நிமிடம் வரை ஊறவைத்து, நடவு செய்ய வேண்டும். இது, வேர் அழுகல் நோயைக் கட்டுப்படுத்துவதோடு, செடிகள் ஊக்கமுடன் வளரவும் உறுதுணை புரியும்.

கிழங்கிலிருந்து பிரதான செடி ஒன்றும், அதைச் சுற்றிலும் கிளைச் செடிகளும் வளர்ந்து பூ பூக்கும். நடவு செய்த 90 நாளில், பிரதான செடியில் பூ அறுவடை செய்யலாம். தொடர்ந்து, 180 நாளில் கிளைச் செடிகள் பூக்கத் தொடங்கும். 90 நாளிலிருந்து, 180 நாட்கள் வரை ஒரு ஏக்கரிலிருக்கும் பிரதான செடிகளிலிருந்து நாள் ஒன்றுக்கு மொத்தம் மூன்று கிலோ அளவில் பூப்பறிக்க முடியும். 180 நாட்களுக்கு பிறகு பக்கக் கிளைகளில் இருந்தும் பூக்கள் கிடைப்பதால், சராசரியாக நாள் ஒன்றுக்கு 30 கிலோ வரை அறுவடை செய்யலாம். தொடர்ந்து, 3 ஆண்டுகள் வரை தொடர் மகசூல் தரும் மலர்ப் பயிர் இது.

மாலை வேளைகளில் பூ பறிப்பதற்கு முன்பு, பட்டாம்பூச்சிப் பாசனம் மூலமாக செடிகள் லேசாக நனைவதால், பறிக்கும் பூ காலை வரைக்கும் வாடாமல் இருக்கும். மொத்தத்தையும் ஆரம்பத்தில் திருப்பூர் பூ மார்க்கெட்டில் கொடுத்திட்டிருந்தேன். என் தோட்டத்தது பூ பளபள என்று இருப்பதோடு பெரிதாகவும், நல்ல வாசத்தோடும் இருப்பதும், மூன்று நாள் வரை வாடாமல் இருப்பதுவும் பலரையும் ஆச்சரியப்பட வைக்கிறது. இதைப் பார்த்துவிட்டு, டிபார்ட்மென்ட் ஸ்டோர்காரர்கள் (பழமுதிர்ச்சோலை), சந்தை விலையை விட கூடுதலாக கொடுப்பதாக சொல்லிக் கேட்டார்கள். அதனால் இந்த இரண்டு வருடமாக தினமும் அவர்களுக்குத் தான் நேரடியாக கொடுக்கிறேன்.

சந்தையோட தேவை அதிகமாக இருக்கும் போது கிலோ 450 ரூபாய் வரை கூட விலை போகும். அந்தப் பருவத்தில் மகசூல் குறைவாக இருப்பதும், ஒரு காரணம். குறைந்தபட்ச விலையாக, கிலோ 100 ரூபாய்

வரை கிடைக்கும். சராசரியாக 100 ரூபாய் என்று வைத்துக் கொள்ளலாம். அதே போல், சராசரியாக தினமும் 25 கிலோ வீதம், வருடத்திற்கு 7 முதல் 8 டன் பூ கிடைக்கிறது என்றார் மூர்த்தி. சொட்டு நீர், பட்டாம்பூச்சிப் பாசனம் இதையெல்லாம் அமைப்பது தொடங்கி... உரம், பூச்சிவிரட்டி தயாரித்து தெளிப்பது.. தினமும் பூக்களைப் பறித்து, சந்தைக்குக் கொண்டு செல்வது எந்த வேலைக்கும் சம்பள ஆட்கள் வைக்கவில்லை. தோட்டத்திலேயே வீடுகட்டி குடியிருப்பதால், வீட்டு வேலையையும் நாங்களே பார்த்துக் கொள்கிறோம்.டிராக்டர் உழவு, தொழுவுரம், பார் பாத்தி, நீர்ப் பாசனக் கருவிகள், விதைக்கிழங்கு, வேப்பெண்ணெய் எல்லாம் சேர்த்து, 1 லட்சம் ரூபாய் செலவு பிடிக்கிறது. இயற்கை வழியில் மலர் சாகுபடி செய்வதால் உற்பத்திச் செலவு மிகவும் குறைவுதான். பாசனக் கருவி வாங்கியதுதான் பெரிய செலவு. ஏக்கருக்கு 35,000 ரூபாய்க்கு வாங்கினோம் ( 5 வருடம் இயங்கும்.) நாங்க உற்பத்தி செய்யும் பூ எல்லாம் முதல் தர வரிசையில் வருவதால்.. செலவு போக, 5 லட்சம் ரூபாய்க்கும் மேல் சம்பங்கிப் பூவில் மட்டுமே வருமானம் கிடைக்கிறது என்றார்.

கோழிக் கொண்டை பூ, 90 நாட்கள் மட்டுமே மகசூல் தரக்கூடிய ஒரு போகப் பயிர் இது. நாற்றங்காலில் 15 நாள் , பூத்து வருவதற்கு 35 நாள் என்று மொத்தம் 50 நாளில் மகசூலுக்கு வந்துவிடும். வாரம் இரண்டு, மூன்று முறை பறிக்கலாம். ஏக்கருக்கு மொத்தமாக 3 ஆயிரம் கிலோ மகசூல் கிடைக்கும். சராசரியாக ஒரு கிலோ 15 ரூபாய் விலையில் விற்பனை செய்தாலே... 45 ஆயிரம் ரூபாய் வருமானமாக கிடைக்கும். செலவு 15 ஆயிரம் ரூபாய் போக, 30 ஆயிரம் லாபமாக கையில் நிற்கும் என்றார்.

குறைவான தண்ணீரில், நிறைவான விவசாயம் செய்வதற்குக் கைகொடுத்து.. பட்டாம்பூச்சி பாசனமுறை, இயற்கை வழி விவசாயத்தில் இணையில்லாத லாபத்தை எடுக்கும் வித்தையைக் கற்று தந்தது.. பசுமை விகடன். இலவசமாகவே களை எடுப்பதுடன், எருவையும் கொடுக்கிறது செம்மறி ஆடுகள்.. இத்தனை உதவிகளும் ஒன்றாக சேர்ந்து... சிக்கன விவசாயத்தில் சிறப்பான வருமானத்தை எங்களுக்குத் தந்து கொண்டிருக்கிறது என்கிறார்கள் மூர்த்தி- ஜெயசித்ரா தம்பதியினர்.

### வேப்பெண்ணெய் புகை.. பூ வாடலுக்கு பகை !

பட்டாம்பூச்சிப் பாசன முறையில் விவசாயம் செய்வதால், நீர்வழியில்தான் வளாச்சி ஊக்கிகள் மற்றும் மூலிகைப் பூச்சிவிரட்டிகள் தரப்படுகின்றன. தினந்தோறும் ஒரு மணி நேரம் பட்டாம்பூச்சிப் பாசனம் மூலமாக செடிகள் நன்கு நனைவதால்.... பேன், அசுவிணி மாதிரியான பூச்சித் தாக்குதல் தடுக்கப்படுகிறது. மாதம் ஒரு முறை, 100 லிட்டர் தண்ணீரில் சுத்தமான வேப்பெண்ணெய் 2 லிட்டர் அளவுக்குக் கலந்து புகைபோல் தெளிப்பதன் மூலமாக பூவாடல் நோய் கட்டுப்படுகிறது.

### மூவிலைக் கரைசல் !

வேப்பிலை, ஊமத்தை இலை, எருக்கன் இலை என இம்மூன்று இலைகளும் கைக்கு எட்டும் தூரத்திற்குள்ளாகவே கிடைக்கக் கூடிய இலைகள். இவை மூன்றையும் தலா 10 கிலோ அளவில் பறித்துவந்து, அவை மூழ்கும் அளவு தண்ணீர் ஊற்றப்பட்ட தொட்டியில் சேர்த்து ஊறவைக்க வேண்டாம். தொட்டி நிழலில் இருக்கும்படி பார்த்துக் கொள்வது நல்லது. தினமும் ஒரு முறை இதைக் கலக்கிவிட்டு வந்தால்.. ஐந்தாம் நாள், அடர் பச்சை நிறத்தில் தொட்டி தண்ணீர் மாறியிருக்கும். இந்தக் கரைசல், பூச்செடிகளைத் தாக்கும் அனைத்துப் பூச்சிகளையும் விரட்டி அடிப்பதுடன், வேர் அழுகல் நோய் வராமலும் தடுக்கும். மாதம் இரு முறை இந்த மூவிலைக் கரைசலைக் கொடுக்கலாம். இதை, காலை அல்லது மாலை வேளைகளில், மட்டுமே கொடுக்க வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

### தெம்பு தரும் தேங்காய் தண்ணீர் !

பூக்கள் ஒரே சீராகவும், அதே சமயம் பெரிதாகவும் வளர்ந்து இருந்தால்தான் நல்ல விலை கிடைக்கும். இதற்கு தேங்காய் தண்ணீர் வைத்தியம் கை கொடுக்கும். முற்றிய தேங்காயின் தண்ணீர் 50 லிட்டர் அளவு எடுத்துக் கொண்டு, மாதம் இரண்டு முறை தெளிப்பு நீர் வழியே செடிகள் நன்றாக நனையும்படி கொடுக்க வேண்டும். இதிலுள்ள இனிப்புத் தன்மை, தேனீக்களை அதிக அளவில் செடிகளின் பக்கம் ஈர்த்து, அயல் மகரந்தச் சேர்க்கையை ஏற்படுத்துவதால், அழகான பெரிய பூக்கள் கிடைக்கின்றன. மூர்த்தியின் தோட்டம் இருக்கும் பகுதியில் கொப்பரை உற்பத்தி செய்யும் உலர்களங்கள் இருப்பதால், அங்கு உடைக்கப்படும் தேங்காய் தண்ணீர் இலவசமாகவே அவருக்குக் கிடைத்து விடுகிறது. பிரபலமான கோயில், ஹோட்டல் என்று தேங்காய்கள் பெரிதாகப் பயன்படுத்தப்படும் இடங்களைத் தெரிந்து வைத்துக் கொண்டால், தேவையான தேங்காய் தண்ணீரைப் பெற முடியும்!

### செம்மறி ஆடுகள் தரும் மூன்றுவித லாபம் !

ஆட்டு எரு: மாட்டு எரு மறுவருஷம் பிடிக்கும்.. ஆட்டு எரு அப்பயே பிடிக்கும்' என்றொரு பழமொழி உண்டு. இது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை, நம்மாழ்வார் பயிற்சி மூலமாக உணர்ந்திருக்கும் இந்தத் தம்பதி.. இதை சிறப்பாகப் பயன்படுத்தியும் வருகிறார்கள். உரம் போடுவதோடு, களையையும் எடுக்கும் வேலையைச் செய்துவிட்டு... சம்பளமே வாங்கிக்காத ஜீவன்கள்தான் செம்மறி ஆடுகள். காலையில் 9 மணி தொடங்கி, மாலை 4 மணி வரைக்கும் சம்பங்கி, கோழிக் கொண்டை வயலுக்குள் தலைகவிழ்த்துக் கொண்டு மாங்கு மாங்கு என்று இணைபிரியாமல் மேஞ்சுக்கிட்டே இருக்கும். வயலில் முளைக்கும் களைகளைத் தின்று அழித்துக்கொண்டே இருக்கும். அது போக பொழுதன்னிக்கும் அதுகள் போடும் புழுக்கைகள் பூச்செடிகளுக்கு நேரடி உரமாக போய் சேர்ந்துவிடும். மற்றபடி அவைகள் கிடையில் அடைத்து வைக்கும் போது, கிடைக்கும் ஆட்டு எருவையும் கொண்டு வந்து, வருடம் இரண்டு முறை வடகிழக்கு பருவமழைக்கு முன்னதாக செடிக்கு 5 கிலோ வீதம் கொடுத்துவிடுவோம். இந்த உரம், மழையில் நல்லாவே வேலை செய்து, பெரிய பூக்களாக மலர வைக்கும். 10 செம்மறியாட்டுக் குட்டிகளை தலா 2,500 ரூபாய் விலையில், மொத்தம் 25,000 ரூபாய் கொடுத்து வாங்கி, பூ வயலில் மேய விடுகிறோம். 5 மாதம் மேய்ந்த பிறகு, தலா 5,000 ரூபாய் என்று விற்பனை செய்கிறோம். பிறகு, புதிதாக 10 குட்டிகளை வாங்கி வந்து மேய விடுகிறோம். ஆக, வருடத்திற்கு 20 செம்மறி ஆடுகளை விற்பனை செய்வது மூலமாக... 50 ஆயிரம் ரூபாய் லாபமாக கிடைக்கிறது. கூடவே களை எடுக்கும் செலவு 10 ஆயிரம், எருச்செலவு 5 ஆயிரம் ரூபாய் மிச்சமாகிறது. ஆக மொத்தம் செம்மறி ஆடுகள் மூலமாக 65 ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது என்கிறார்.

---

தொடர்புக்கு
**மூர்த்தி,**
**செல்போன் : 97904 95966**

***ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 10.12.13 www.vikatan.com***